

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூர் 7வது வார்டு பிரதிநிதி டி. கனகசபை தாயார் மறைந்த டி.திலகவதி அம்மாள் அவர்களின் உடலுக்கு வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினார். மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி வி ஆர் சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் புக்கடை கணேசன் , பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன் , ஒன்றிய குழு தலைவர் ஓம் சிவ சக்திவேல், துணைத்தலைவர் ஜோதி , மாவட்ட பிரதிநிதி சுரேஷ் பாபு , இலக்கிய அணி விஜயபாபு , தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு , கிருஷ்ணராஜ், முன்னாள் மாணவர் அணி அன்பழகன் உள்ளிட்ட நகர நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் , வார்டு செயலாளர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அம்மாபேட்டை, சாலியமங்கலம், பாபநாசம், கும்பகோணம் வழியாக சென்னை கிளாம்பாக்கம் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கத்தினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மேயர் க.சரவணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கோவை மாவட்டத்தில் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது!

# கோவை மாநகராட்சியில் ரூ.415 கோடி மதிப்பில் சாலைகள் அமைக்கும் பணிக்காக நிதி ஒதுக்கீடு!

### அமைச்சர் செந்தில்பாலாஜி பேச்சு!



கோவை, டிச. 30 -

கோவை மத்திய சிறையில் 75 நாட்கள் இருந்த நானே இன்னைக்கு சிறைக்காக 95 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி கொடுத்துள்ளேன் மிகவும் பெருமையாக உள்ளது தமிழ்நாடு கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் காந்தி பேச்சு

கோவை தடாகம் சாலை இடையர்பாளையம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பூமிதான திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக செம்மேடு மற்றும் ஒடந்துறை பகுதியில் வசித்து வரும் 257 நபர்களுக்கு வீட்டு மனை நில விநியோக பத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வீட்டு மனை நில விநியோக பத்திரங்களை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர் செந்தில்பாலாஜி ஏறத்தாழ 30 ஆண்டு காலங்களாக நில விநியோக பத்திரங்கள் கிடைக்குமா?, கிடைக்காதா? என்ற நம்பிக்கை இழந்த சூழ்நிலையில் உங்களுக்கு நான் இருக்கிறேன் என தமிழக முதலமைச்சர் 30 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி தந்திருக்கிறார் என தெரிவித்தார். இதற்காக கைத்தறி துறை அமைச்சர் இரண்டு மணி நேரம் செலவழித்து இவற்றில் கையொப்பமிட்டுள்ளார் என்றார். இந்த மூன்றரை ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் மட்டும் 17 ஆயிரத்திற்கும் மேல் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தமிழக அரசின் விடியல் பயணம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் திட்டம் போன்ற திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். பள்ளிக்கல்வித் துறையில் காலை உணவு திட்டத்தை செயல்படுத்தி வருவதையும், தமிழ் புதல்வன், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம் என பல்வேறு திட்டங்களை குறிப்பிட்டார். கோவை மாநகராட்சியில் மட்டும் 415 கோடி மதிப்பில் சாலைகள் அமைக்கும் பணிக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார். மேற்கொண்டு மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சாலை பராமரிப்பிற்காக 200 கோடி ரூபாய் சிறப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 100 கோடி ரூபாய் டெண்டர் விடும் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் பேசிய கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி 257 பேருக்கு தற்பொழுது பட்டா வழங்கப்படுவதாக தெரிவித்தார். கோவை மாவட்டத்தில் மட்டும் 1554 ஏக்கர் பூமிதான நிலம் இருப்பதாகவும் அதில் தற்பொழுது வரை 117 ஏக்கர் நிலங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். மேலும் பல்வேறு துறைகளுக்கும், சிறைச்சாலை, காவல் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றிற்கு நிலங்கள் வழங்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டார். இந்த பூமிதான துறைக்கு தலைவராக தன்னை முதலமைச்சர் அமர்த்தி இருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்பொழுது மக்களுக்கு வழங்கப்படும் வீட்டுமனை பட்டாக்களை விட இன்னொரு மகிழ்ச்சியான விஷயம் ஒன்று உள்ளது. அது என்னவென்றால் 1991ம் ஆண்டு, எந்த காரணமும் இல்லாமல் கோவை சிறையில் 75 நாட்கள் இருந்ததாகவும் ஆனால் தற்பொழுது அதே சிறைச்சாலைக்கு கிட்டத்தட்ட 95 ஏக்கர் நிலத்தை தற்பொழுது கையெழுத்து யிட்டு தந்திருக்கிறேன். இதனால் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் மக்கள் வரிப்பணத்தை வீணடிக்க மாட்டார் என தெரிவித்த அவர் கலைஞர் காலத்தில் வழங்கப்பட்ட கலர் டிவி தற்பொழுது வரை ஓடுகிறதா? இல்லையா? எனவும், அதற்கு பின்பு ஆட்சிப் பொறுப் பேற்றவர்கள் மிக்சி, கிரைண்டர், மின்விசிறி எல்லாம் வழங்கினார்கள். ஆனால் தற்பொழுது அது இல்லை என தெரிவித்த அவர், இரண்டு ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம் அதுதான் என கூறினார். இந்த ஆட்சியை திமுக ஆட்சி என்று கூட நான் கூற மாட்டேன் இது மக்களாட்சி எனவும் மக்களின் தலைவர் தான் ஸ்டாலின் எனவும் புகழாரம் சூட்டினார். மேலும் தமிழக முதலமைச்சரை அண்டை மாநிலமான கேரளாவில் மிகவும் பாராட்டுகிறார்கள் எனவும், பல்வேறு மாநிலங்கள் இவரை பின்பற்றுவதாக தெரிவித்தார். நம்முடைய முதலமைச்சர் கல்வி மற்றும் சுகா தாரத்திற்கு முக்கியம் அளிப்பதாகவும் அதற்கு காரணம் ஒரு மனிதனுக்கு ஓரளவு சிந்திக்கின்ற சக்தி வந்து விட்டாலே நல்லது கெட்டது தெரிந்துவிடும் அப்பொழுதுதான் நம் ஊரும், நாடும் மட்டுமல்லாமல் அனைத்தும் நன்மையாக இருக்கும் என தெரிவித்தார். எனவே பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்து கொண்டிருந்தது தற்பொழுது மூன்றரை ஆண்டுகளாக என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை சிந்தியுங்கள் என தெரிவித்தார். எனவே மக்கள் அனைவரும் சிந்தித்து செயல்பட வேண்டும் கூறினார்.

மகளிர் உரிமைத் தொகையை எங்களுக்கு அளிக்க கூடாதா? என ஆண்களை குறிப்பிட்ட அமைச்சர் காந்தி எங்களுக்கு அளித்தால் என்ன ஆகும் என்று தெரியும் என்று சிரித்துக் கொண்டே குடும்பத் தலைவிகளுக்கு தான் குடும்பத்தை பற்றி தெரியும் என தெரிவித்தார். மேலும் நானும், செந்தில் பாலாஜியும் மந்திரிகள் தான் ஆனால் எங்களுக்கு குடும்பத்தை பற்றி தெரிந்தது பூஜ்ஜியம் தான். எனது மனைவிக்கு தான் குடும்பத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்று தெரியும் என்று தெரிவித்தார். இதற்காகத்தான் மகளிர்க்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், தனிச் செயலாளர் ஹரிஹரன், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மேயர் ரங்க நாயகி, துணைமேயர் வெற்றிச்செல்வன், திமுக மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, முன்னாள் எம்பி நாகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போட் ராஜேந்திரன், டிஆர்.சண்முகசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் சாதனைகளை விளக்கி

# வரதராஜன்பேட்டை பேரூரில் தெருமுனைப் பிரச்சாரக்கூட்டம்!

அரியலூர், டிச, 30-

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் வடக்கு ஒன்றியம் வரதராஜன்பேட்டை பேரூர் திமுக சார்பில், கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம், மாவட்ட செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதல் படி, வரதராஜன்பேட்டையில்

பேரூர் கழக செயலாளர் அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

எல்.ஹென்றி வரவேற்புரையாற்றினார்.

தெருமுனைக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா , கழக இளம் பேச்சாளர்கள் வே.ஆர்த்தி, பி.நிலோபர் நிஷா, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி மேலிட பார்வையாளர் கலா சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் ஆண்டிமடம் வடக்கு ஒன்றிய செயலாளர் ரெங்கமுருகன், பேரூராட்சி தலைவர் மார்கிரேட் அல்போன்ஸ், , து.தலைவர் எட்வின் ஆர்தர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இளங்கோவன், ஒன்றியக்குழு உறுப்பினர் பத்மநாதன் மற்றும் வரதராஜன்பேட்டை பேரூர் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நிறைவாக முன்னாள் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் அருள் விஜய் ரொசாரியோ நன்றி கூறினார்.



சேலம் மத்திய மாவட்டம் மாநகர மாணவர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி செஸ் போட்டியை மேயர். ஆ.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர். சி.ராஜேந்திரன், மாநகர செயலாளர். பா.ரகுபதி, மாநகர அமைப்பாளர். எம். மணிகண்டன். துணை அமைப்பாளர்கள்.எஸ்.சுந்தர், டி. இந்துஜா, ஜே.மோகன்.ஏ.சீனிவாசன், பி. இளஞ்செழியன். கோட்டக் செயலாளர்கள். இப்ராகிம், ஷானவாஸ் ஆகியோர் இருந்தனர்.

### கழக மாநில மீனவர் அணி சார்பில் - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்

# சுனாமியில் சிக்கி உயிர்நீத்தவர்களுக்கு நினைவஞ்சலி - 5000 பேருக்கு நல உதவிகள்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினர்!

சென்னை, டிச.30-

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சுனாமி ஆழிப் பேரலையில் சிக்கி உயிர் நீத்த மீனவ சொந்தங்களுக்கு கழக மாநில மீனவரணி சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் திருவொற்றியூர் கே.பி.சங்கர் தலைமையில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் ஏந்திச் சென்ற அமைதி ஊர்வலத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்து 3000க்கும் மேற்பட்டவர்களுடன் கே.வி.கே. குப்பம் கடற்கரையில் அஞ்சலி செலுத்தினார்.

பின்பு நடைபெற்ற நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஏழை எளிய உழைக்கும் மக்கள் 24 பேருக்கு தையல் இயந்திரம், 5 பேருக்கு இஸ்திரிப் பெட்டி, அரசு பள்ளியில் பயின்று தேசிய அளவில் புது டெல்லியில் நடை பெற்ற குத்துச் சண்டை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி நித்திய ஸ்ரீ அவர்களுக்கு ஊக்கத்தொகையும், பார்வை திறன் குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளி ஜீவாவுக்கு உதவி தொகையும், நிகழ்வில் கலந்து கொண்ட 5000 பெண்களுக்கு அரிசி, புடவைகள் வழங்கினார்கள்.

இதில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், கழக பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், துர்கா கோதண்டம், வட்டக் கழக செயலாளர்கள் ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், தச.கரிகால சோழன்,

14 வது வட்ட மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், கோமதி சந்தோஷ்குமார், மாவட்ட காங்கிரஸ் தலைவரும், மாமன்ற உறுப்பினருமான சாமுவேல் திரவியம், மாவட்ட பிரதிநிதி கே.கார்த்திகேயன், சந்தானகிருஷ்ணன், எத்திராஜ், அப்துல் சலீம், ஸ்டாலின், கழகப் பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, எழும்பூர் கோபி, வாசு கருணாநிதி, டெய்லர் மணி, வழக்கறிஞர் நா.ஜெய்சங்கர், இளையவன் சங்கர்,

மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங், துணை அமைப்பாளர்கள் எஸ்.செல்வம், டி.அல்லி முத்து, தமிழ்ச்செல்வன், ஆர்.குமரன், ஜி.முரளி டி.தேசப்பன், எம்.எல்.வேலன், எம்.ரமேஷ், இரா.பிரகாஷ், டி.மகேந்திரன், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் பிரிட் சுரேஷ், மாவட்ட அயலக அணி கார்த்தி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அ. அலவி, சென்னை வடக்கு மாவட்ட மீனவரணி தலைவர் எஸ்.கே.இளங்கோ, துணை அமைப்பாளர் சுரேஷ்,

ஜே.ஆர்.டி. சேகர், எம்.கார்த்திக், சேகர், எஸ்.முகுந்தகுமார், மணலி ரவி, வசந்தராஜ், கே.எஸ்.ஆனந்தன் கருணாநிதி, எம்.எஸ்.பாண்டியன், உதயகுமார், எல்லப்பன், ரவிச்சந்திரன், பிரேம், மணலி எழில், நேரு நகர் எம்.இளங்கோவன், ஜெ.திலகர், போட்டோ செந்தில், அன்பு செல்வம், மதுரை முத்து, ஜோதி, சோமசுந்தரம், மூர்த்தி, சாலை சுரேஷ், புதியவன், இரா.கணேசன், எஸ்.கே.ராஜ், ராஜேந்திரன், எஸ்.விஜயராகவன், வே.கோபால், கே. ரமேஷ், ஜி.கஜேந்திரன் யூ.சார்லஸ் ஒய்.ஃபாரூக் ஜி.விஜயலட்சுமி கே.செந்தில் பி.முத்து கருப்பன், டி.எஸ்.பாபு டபிள்யு பீட்டர் சி.சுப்பிரமணியன் கே.சரவணன் எம்.வி.வசந்த் கே.பாலு எச்.அலெக்ஸ் எம்.குமார் ஆர்.குணசேகரன் பி.ராஜேஸ்வரி எம்.அனிதா, சாவித்திரி, விஜயா, டி.ரமேஷ், கே.தேவராஜ், எஸ்.ஈசாக், மகேந்திர பாபு, ஆர்.எம்.செல்வம், சண்முகநாதன், என்.தன்ராஜ், பிரதீப், திவாகர், எம்.செல்வம், சின்ன குப்பம் வேலு, மகளிர் அணி புனிதா, சந்திரலேகா, ஹேமலதா, தொமுச ராஜவேல், எஸ்.விஜயராகவன், எம்.டி.சி. சின்னா,

இப்ராஹிம், லோகநாதன், சண்முகம், செந்தில், ஜி.மோகன், புனிதா, சந்திரலேகா, ஹேமலதா, வாசுகி, செல்வம், மீனா, விமல், அஜித், சிவா, குப்பன், முரளி, ஸ்ரீதர், ராஜேஷ், சதீஷ், சந்தோஷ், நரேஷ், சரண், சண்முகம், இளங்கோ, சங்கர், அன்புசெல்வம், அருண், ஜோசப், பிரதீப், பிரசாந்த, சூர்யா, கமல், ராஜா, அரவிந்தன், இளம்பரிதி, சந்தீப் மற்றும் எம்.ஆர்.எப். மனுவேல் லாரன்ஸ், ஜெகநாத் பிரபு, மனிதவள மேலாளர் ஆல்பர்ட் டேனி, குடும்ப நல ஒருங்கிணைப்பாளர் கண்மணி மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள்கள் திரளாக கலந்துகொண்டனர்.

இறுதியாக வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி தெரிவித்தார்.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.84 லட்சம் மதிப்பில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் உழவர் ஆலோசனை மையக் கட்டடத்தினை தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சியர் எம். எஸ்.பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர், இதில் வேளாண்மை துறை இயக்குனர், உதவி இயக்குனர், விற்பனைக்குழு செயலாளர், வேளாண்மை அலுவலர்கள்,உதவி வேளாண்மை அலுவலர்கள்,உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் இயக்குனர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள், விவசாயிகள் உள்பட பலர் உடன் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விராலிமலை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் சித்தாம்பூரில் நடைபெற்ற மாபெரும் இலவச பொது மருத்துவ முகாமை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தொடங்கி வைத்தார். விராலிமலை தொகுதி பார்வையாளர் தஞ்சாவூர் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதியின் மருத்துவக் குழு மற்றும் வட்டார மருத்துவ அலுவலர்கள் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த முகாமில் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். நிகழ்ச்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள், பயனாளர்களுக்கு மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மு.பி. ம.சத்தியசீலன், ஒன்றிய பெருந்தலைவர் காமு முபி.மணி, கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம். பழனியப்பன், மாவட்ட கவுன்சிலர் சாந்தி தங்கசிங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி சிவா உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் பேரூராட்சி 18 வது வார்டுக்குட்பட்ட தெற்கு கண்ணாடிப்புத்தூரில் 2024 – 2025 நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் அமைக்கும் பணி, சிறப்பு மூலதன நிதியில் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் நூலக கட்டிடம் அமைக்கும் பணியினை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.சாகுல் அமிது, பேரூராட்சித் தலைவர் கலைவாணி பாலமுரளி, பேரூர் செயலாளர் என்.பாலகிருஷ்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.